# தலைவர்

## வாழ்த்துச் செய்தி

பனைவளம் வடபகுதி மக்களின் பொருளாதாரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. ஆயிரத்திற்கும் அதிகமான உற்பத்திப் பொருட்களை தரவல்ல பனை இன்று தென்னிலங்கையிலும் பயன் கொடுத்து வருவதைக் காண முடிகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தில் பனையும் ஓர் அங்கமாக விளங்குவதைக் கருத்திற் கொண்டு பனை அபிவிருத்திச்சபை உருவாக்கப்பட்டது. வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழிவில் பனையை நம்பிவாழும் மக்கள் குடும்ப வருவாயை ஈட்டக்கூடியதாக உள்ளது.

வடக்கின் மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபை பனை அபிவிருத்திச்சபையுடன் இணைந்து பனைவள அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வந்தது. இந்த வகையில் பனைவளத்தின் பயன்பாடுகளை விளக்கும் கண்காட்சி நடத்தப்படுவது முற்றிலும் பொருத்தமானதும், மகிழ்ச்சி அளிப்பதுமாகும்.

பனைவளக் கண்காட்சி மூலம் மேலும் பல புதிய உற்பத்திப் பொருட்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட வேண்டும். பனைவள உற்பத்தியாளர்களின் ஊக்குவிற்பிற்கும் முதலீட்டிற்கும் இக்கண்காட்சி வழிவகுக்கும் என வாழ்த்துகின்றேன்.

ந.வாமதேவ
தலைவர்

M.T.S

BABY

**Mannar Transport**

**117/A, Wolfendhal Street,**
**Co;ombo -15 ☎:01-384671**

எல்லாவிதமான கேக், ஐஸ்கிறீம், மற்றும் குளிர்பான தயாரிப்புக்கான பொருட்கள்

கைத்தொழில் மூலப்பொருட்கள்

வாசனைத் திரவியங்கள்

ஆயுள்வேத மருந்துச் சரக்குகள் மற்றும் பிஸ்கட் வகைகள், ரொபி வகைகள்

அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட நாடுங்கள்

ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறிஸ்

161 A, கே. கே. எஸ். வீதி, T.P.2219
யாழ்ப்பாணம்.

DANISCO Ingredients
MATRIX FLAVOURS FRAGRANCE
BAKERS MAN
Twins Brand
CPL FLAVOURS
BUSH BOAKE ALLEN

# PETTAH ESSENCE SUPPLIERS

**IMPORTERS AND DISTRIBUTORS OF RAW MATERIALS FOR**
**Biscuits,Bakery Products,Confectioneries,IceCream,Yogurt,Hotel Products,**
**Jam,Soft Drinks & Fruit Drinks Etc.**

| | | | |
|---|---|---|---|
| Full Cream | Acid Sodium | Shortening | S.C.M.C |
| Skimmed Milk | Butter Ghee | Canned Foods | Sodium Benziode |
| Wheny Poweder | Liquid Glucose | Imported Sauces | Pottasium Sorbate |
| Lesathine | Gelatine | Lelly Crystald | Essences |
| Malt Extract | Corn Flour | Cake Ingredients | Colouring |
| Citric Acid | Cocoa Powder | Baking Powder | Vegetable Ghee |
| Sodium BiCarb | Margarine | Lcing Sugar | Pectin |

**19,DAM STREET,COLCMBO -12**
**Tel:-326235,449269,441721 Fax:-434859,441721**
**104,Hospital Road,Jaffna.**

## MESSAGE FROM THE PRINCIPAL OF ST.JOHN'S COLLEGE, JAFFNA.

I have great pleasure in sending my greetings to the Palmyrah Development Board on the occasion of the Exhibition and Competition of Palmyrah based products to be held at St.John's from 7th to 9th April 2002. Palmyrah Development Board has rendered satisfactory services to Palmyrah Developments during the past decade by production, markeing, reserch and extension services. Palmyrah Development Board has contributed immensely in the social, economic and scientific aspects of palmyrah resources. This Grand Exhibition after a long gap in Jaffna will cerainly create awareness among people and school children. This would lead to more marketing facilities for palmyrah products.

I am glad that the Palmyrah Development Board contemplates to avail an opportunity to encourage the handicraft instructors and producers of handicrafts by organising this palmyrah based handicraft Exhibition and Competition in order to entice their creative powers.

With best wishes for a successful Exhibition.

S.Thanapalan.
Principal.

With Best Cpmpliments of

**SRILANKA INSURANCE CORPORATION LTD.**

| | |
|---|---|
| **DIVITHILNA** | **Provides a higher return to your Investment, whilst providing protection** |
| **YASA ISURU** | **Life Cover Plus periodical advance payments to fulfill your aspirations in life** |
| **MINIMUTHU** | **Provides assistance for education. A wise investment.** |

**SriLanka Insurance corporation Limited**

**No-12,Veerasingam Hall, Jaffna..**


**Tel.021-2023**

**Fax:021-2023**

With Best Cpmpliments of

**VJ**

**Vasantha Jewellery (pvt) Ltd.**



**MANUFACTURES AND EXPORTERS OF GENUINE GOLD JEWELLERY**

**AUTHORISED MONY CHANGERS**

**11/20,Gold Plaza,Sea Street,Colombo-11**

**T.Phone;342266, 430624**

**Fax: 449319**

## யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபரும்-வடமாகாண அதிபர்களின் சங்கத் தலைவருமான திரு.க. இராசதுரை அவர்களின் ஆசிச்செய்தி

பனை அதன் பயன்பாட்டை பல்லாயிரம் வருடங்களாக எமது சமூகத்திற்கு வழங்கி வந்தாலும் அதனைப் பேணிப் பயன்பெற ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்டமை-பனைஅபிவிருத்திச்சபை அமைக்கப்பட்மை ஒரு முக்கிய நிகழ்வாககும்.

இதன் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் உழைத்த பலரை நாம் இலகுவில் மறந்து விடமுடியாது. கலாநிதி என்.எம்.பெரேரா, திரு.நித்தியானந்தா, திரு க.கனகராஜா, திரு.க.நடராஜா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பனை அபிவிருத்திச்சபையின் தலைவராக மிக நீண்ட காலமாக-பதின்மூன்று ஆண்டுகள் கடமை புரிந்து சபையின் பெருமையை நாடுபூராவும் மட்டுமன்றி சர்வதேசத்துக்கும் எடுத்துச் சென்று முத்திரை பதித்த முன்னாள் தலைவர் திரு.க.நடராஜாவின் சேவையைப் பின்னற்றி அதே ஆர்வத்துடன்-அர்ப்பணிப்புடன், சமூகஉணர்வுடன் கடமைபுரியும் புதிய தலைவர் திரு.பொ.சிவபாதம் அவர்கள் சபைக்கு கிடைத்திருப்பது சபைபெற்ற பாக்கியமே.

அவரின் தலைமைத்துவத்தின் கீழ் சபை புதிய வளர்ச்சியைப் பெறப்போவதை அவரால் ஒழுங்குபடுத்தப்பட்ட கண்காட்சியும், பாடசாலைகளூடாக நடாத்தப்பட்ட போட்டிகளும் கட்டியம் கூறி நிற்கின்றன.

பனை சார்ந்த தொழிலை தமது சீவனோபாயத் தொழிலாக மேற்கொண்ட சமூகத்தின் தேவையை நாடிபிடித்துப்பார்த்து இயங்கக்கூடிய ஒரு தலைவர் மீண்டும் கிடைத்திருப்பது மிக அதிஷ்டமானது. அதற்கு வழிவகுத்த அமச்சர் கௌரவ.தி.மகேஸ்வரனுக்கும் இச்சமூகம் நன்றியுள்ளதாக இருக்கும்.

தமிழப் பிரதேசத்தின் இயற்க்கைப் பொருளாதார வளமான கடல்வளமும், பனையின் பயன்பாடு பற்றி ஏனைய தொழில்நுட்ப்பாடம் கற்பிப்து போல் பாடசாலைகளில் இவ்விரு பாடங்களும் தொழிநுட்பப் பாடமாக கற்பிக்கப்படுவது பற்றி வடக்கு, கிழக்கு மகாணமட்டத்தில் திட்டமிடப்பட வேண்டும். புதிய தலைவர் காலத்தில் இது சாத்தியப்பட வேண்டுமென வேண்டுகின்றேன்.

கண்காட்சியும் சபையின் ஏனைய செயற்பாடுகளும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
க.இராசதுரை

எமது சங்கத்தின் வளர்ச்சிக்கும்
அபிவிருத்திக்கும்
தோழமையுடன்
உதவிவரும்
பனை அபிவிருத்திச்சபை
நடாத்திவரும்
பனைவள கண்காட்சி
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

மன்னார் மேற்கு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)
பேசாலை தலைமன்னார் வீதி,
பேசாலை.

# The Palmyrah our Treasure

Palmyrah its point I onigin is not exactly known but it is widely distributed through out the tropis for example, South and south east Aica including the Indoneian Archipwlago, west Africa, Burma, Thailand Vietnam and China.In all these countries it occurs meanly in the arid zones. In SriLanka it exists in dry zone Mainly in the North Eastern region covering an area of 70,000 hectares. The total palms have been estimated as 11 million.The present distrbuttion of bearing plants in SriLanka are as follws:-

Jaffna district 3,500,000, Kilinochchi 3,500,000, Mannar 3,000,000, Trinncomalee 312,000, Mullaitivu 300,000, Vavuniya 8,000, Anuradhapura 40,000, Batticaloa 200,000, Ampara 40,000, Puttalam 120,000 and Hambantota 2000 trees.

There are female and male plants. The female plant is economically more valuable. Male and female flowers borne on separate trees. Palmyrah has been called the tree of life as it has contributed in a major manner to the poor classes of people as shelter food and a base for generating income. All parts of palmyrah are useful in various ways.

The only board has its head office in Jaffna. The officers are to be enthusiastic and sincere in indulging there work in the board.The people woh love the soil must promote the production and research pattern to suit the era. It should be a developments in palmtrah products.Deeds are more likely needed to strenghthen the Board not the words.

The plant is very versatile and in that it can result in several utilizable products. These can be clarified into edible and non edible. The poor masses should elevat their life swiftly and unprecedentdly.A golden opportunity was created in 1978 forming the Palmyrah Development Board. Exorbitant export facilities should be brought in ot put the Board in the glorious path.

Trunk of the palmyrah tree is strong and upright. It can bear considerable cross strain. During the past it was used for bunkers as a subsititute for concrete. Likewise petioles enable us to create heavy ropes and rugs.Stalk is used for fencing and obtaining a cane fiber strip. It is one of the useful handicraft material Seeds can be used in manufacturing charcoal in addition to its use in Handicraft. Leaf is of great use in various handicraft fil\eld. Top to bottom of the tree is useful ot human life.

One of the most important source of the North-East Province is palmyrah. The plantation of the tree is very essential owing to the resources from the tree in the past. Future generation can get the benefit of the resources from the tree. For healthy life the palmyrah edible products act as catalyst. Above all these the people monitor the board should have centered realization of the upliftment of poor masses and to stear with integrity,honesty and sincerity.

Young kiddies of the soil with a smiling face in future can more their jips with rythematic pride for the anthem below:

My Pal is Palmyrah
My Mum is Palmyrah
Ever giving resources
To the helm of higher degree
To Avoid begging
With unprecedented Treasure.

K.C.VELAUTHAM S.L.E.A.S
Rtd.Director of Education

"பனை வளக் கண்காட்சி சிறப்பு வாழ்த்துகின்றோம்"

# INSURANCE BROKERS

## AND TECHNICAL SERVICES (PVT) LTD

## T.Arumugasamy

**CHAIRMAN**

**UG/85, PEOPLE'S PARK COMPILEX**
**COLOMBO - 11**

**TELEPHONE :- 431490, 070-712472**
**FAX :- 431490**

# பனையும் பண்பாடும்

கற்பகங்கள் தேவர் உலகிலே தான்
காணலா மென்று
முற்பிறந்த முனிவர்களும்
மனிதர்களும் சொன்னகதை!
மற்றெவைகள் அழிந்தாலும்
மானமுடன் மடிவிரித்து
புற்றீசல் போலப் பிறந்தெழுந்த
பனை விதைகள்!
கற்குவியல் கடும்கோடை
காலமெல்லாம் போர்ச் சூழல்
இற்றைவரை சளைக்காது
இடம் பெயராக் கற்பகங்கள்!

தானும் மடியாது
தாயகமும் ஒடியாது
போனவற்றை நினைத் தேங்கும்
பொழுது அதற்கில்லை
வானம் மழை இழக்கும்!
வையகம் கழை இழக்கும்!
வந்தோர் தொடை பிளப்பார்
இருந்தோர் இடையிழப்பார்
மோனத் தவமுனியும்
உன்போல் பொறுமையில்லை
மேனி மடி பிளந்து
முளைக்கின்ற கற்பகமே!

கோடை வெயில் கொழுத்த
குடல் கருகிப் பயிர் விழுத்தும்!
ஓடை நீர் குறைந்து
ஒவ்வொன்றாய் சீர் மறையும்!
தாடை நடு நடுங்கி
நாவறண்டு போனாலும்
ஆடை அசையாது
ஆழமாய் வேர் புதைத்து
அருந்திக் குடிக்க வென
நுங்காய் பதநீராய்
விரும்பும் உடன் கள்ளாய்
விதவிதமாய் உருவெடுப்பாய்!

நோயும் மருந்துகளும்
நுண்ணுயிர் பீடைகளும்
வேயும் இவ்வுலகத்தில்
வேகாது உன் பிறப்பு
நாயும் விசர் வந்தால்
நன்றியையும் மறந்துவிடும்
நீயோ நாம் இளைக்கும்
நெட்டூரங்களை மறந்து
மாயும் வரை எமக்கு
மருந்தாகி விருந்தாவாய்!

எல்லாத் திறமைகளும்
ஒருவர்க்கே வருவதில்லை!
எல்லா மரங்களிலும்
ஏகமுமே பயனில்லை!
நல்லோர் மனம் போல
நானிலத்தில் தினம் வாழ
கல்வியின் ஏட்டிற்கும்
காக்கின்ற வீட்டிற்கும்
காவலாய் நிற்கின்ற தோப்பிற்கும்
வல்லமை காட்டும் வனப்புக்கும்
வாழ்நாள் பெருமையின் மூப்பிற்கும்
இல்லையே பல மென்று
இளமையை மீட்கின்ற யாக்கைக்கும்
பல்லில்லாதோர் பருகும் கூழுக்கும்
பழமாகி பலகாரச் சூட்டிற்கும்
வல்லமை பலவாகி எங்கள்
வரலாற்று நிலவானாய்!

.தாயகமும் தேசியமும்
தமிழ் மொழியை இனம்காட்டும்!
நேயபனை தானெங்கள்
தேசிய மரமாகும்!
ஆயபதநீரும் நுங்கின் இளநீரும்
தேசிய பானங்கள்!
பாயப்பம் பனாட்டுக்களும்
புழுக் கொடியல் மாக் கலந்த
தாயகத்து உணவுகளை
உண்டாலே நோயகலும்!

காயகற்பம் பனை மரங்கள்
கரம் நீட்டும் வாருங்கள்!
நேய மனத்தோடு நெஞ்சங்கள் நிமிர்ந்து வர
நாளைய வடலிகள்தான் நாட்டை வழிநடத்தும்!
நேர்த்திகளை எல்லாம்
நடவடிக்கை ஆக்கிடுவோம்!
தூய நினைவோடு துரிதமாய்ப் புதைத்தால்
தாகமுனைவுகளை பனையென்றும் நனவாக்கும்!

மாய மான் போல மறையாத பூர்வீகம்!
மடியாது காப்பதற்கு மண்ணெல்லாம் பனை நடுவோம்!
வானைப் பிளந்து பல
வசனங்கள் பேசாமல்
ஓயாது ஒடுங்காது
ஒவ்வொன்றாய் விதை புதைத்து
சாயாது நடைபோட
சகோதரரே வாருங்கள்!

-புவனேஸ்-

# பனம் பொருள் கண்காட்சி

"கண் காட்சிகள்" கடந்த காலத்தை நினைவூட்டுவதாயும் நிகழ்காலத்தை சித்தரிப்பதாயும், வருங்காலத்தை வளமாக்குவதற்காகவும் வடிவமைக்கப் படுகின்றன.

தொல் பொருள் சான்றுகளை வைத்தே கடந்த கால சமூகங்களின் வாழ்வியல் வரலாறுகள் ஊகப்படுத்தப் படுகின்றன. நம் தேசிய சொத்தாகிய பனை வளங்களின் மறைந்துபோன, மறையமுனைகின்ற பல்வேறு பாரம்பரிய பொருட்களுடன் நவீன தேடல்களுக்கும் வழி வகுத்து புதிய சிந்தனைக்கு வித்திட்டு எதிர்காலத்தை நிர்மாணிக்க இந்த கண்காட்சி வழிவகுக்கும்.

இங்கு பார்த்த இடமெல்லாம் பனைகளின் கண்காட்சி தான். இருந்தும் அதன் பயன்களையும், பெறுமானங்களையும், எல்லோருமே பூரணமாக அறிந்து கொள்ளவில்லை. பனை அபிவிருத்திச் சபை பல்லாண்டுகளாக படிப்படியாக ஏற்படுத்திய அபிவிருத்திகள், அயராத முயற்சிகளினால் பல்வேறு துயரான சூழல்களிலும் கூட இதன் விரிவாக்கம் அர்ப்பணித்த சேவைகளால் தொடருகின்றது.

எல்லா ஊடக விளம்பரங்களையும் விட கண்காட்சி நேரிலும் நிதர்சனமாயும்,நெறியாக்கப்படுவதால் எல்லா மக்களின் சிந்தனைகளுக்கு தானாகவே விளக்கமளிக்கிறது. மேலும் பல தேடல்களை உருவாக்கி எதிர்கால வளத்திற்கும் இது வலுவூட்டும்.

மீண்டும் புது வாழ்வு ஆரம்பிக்க முனையும் எமது பிரதேச மக்களுக்கு "பனை" தொடங்கிய இடத்தில் வாழ்ந்த மண்ணில் இவை வழி வழியே சென்று பல பனை வளங்களை உருவாக்கும் என நம்புகின்றேன்.

பனை வளர்த்தால் பயன் பெறலாம்
மண் சாட்சி!
பனம் பொருட்கள் வளம் பெருக்கும்
கண்காட்சி!

மன்னார் மாவட்டத்தில் உழைக்கும்
மகளிர் அபிவித்தியில் என்றும்
அக்கறையுடன் உதவிக்கரம்
நீட்டிவரும் பனை
அபிவிருத்திச் சபை
நடாத்தும்
பனைவள கண்காட்சி சிறப்புற
எமது வாழ்த்துக்கள்

உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்
பிரதேச காரியாலயம்,
பனை அபிவிருத்திச் சபை
மன்னார்

# தாலவள அபிவிருத்தி

ஒரு நாட்டின் வள ஆதாரத்தைப் பயன்படுத்தல்,பாதுகாத்தல் என்பது மனிதன் தனது சூழலைப் பயன்படுத்து மாற்றையும், அதனைத் தன் எதிர்காலம் பயன் கோடற்காகப் பேணிப்பாது காக்கு மாற்றையுமே குறிப்பதாகும். மூலவளப்பயன்பாடு, பாதுகாப்பு என்ற அம்சங்களில் ஒரு குறிப்பிட்ட நாட்டு மக்களின் பண்பாட்டு நிலை வாழ்க்கைத் தராதரம் ஆகியனவும் அடங்கும். மூலவளப் பயன்பாட்டுத் திறமை, குறிப்பிட்ட ஒரு மக்கட் தொகையின் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தினாலும், சிறப்பாயமைவது வழமை. இந்த வகையில் தமிழ் மக்களின் வாழ்க்கையோடு தொன்று தொட்டு பின்னிப் பிணைந்து விளங்குகின்ற கற்பகதரு வாகிய பனைவளம் எமது வாழ்வுக்கு தேவையான உணவு, உறைவிடம், ஆகிய இரண்டு பிரதான தேவைகளையும் வழங்குவதால் அதன் பயன்பாடு எமது வாழ்க்கையோடு ஒன்றினைந்து விட்டதெனலாம். வற்றாத இயற்கைச் செல்வமான பனைவளம் தமிழ் மக்களின் கலையும் பண்பாடு வளர்வதற்கும் வேலைவாய்ப்பு நல்குவதற்கும் சிறந்த வளமாகும்.

வரண்ட பிரதேசத்தின் வளம் கொழிக்கும் தாவரமாகப் பனைவளம் நிறைந் திருப்பதால் மக்களது வாழ்வியலோடு பனைமரம் நெருக்கி இணைந்துள்ளது. மக்களது பண்பாட்டிலே பனை நிறைந்துள்ளது. பனை தந்த வளங்கள் வாழ்வோடு அது இணைய உதவின. உணவு நிலையில் மட்டுமன்று உணர்வு நிலையிலும் தமிழ் மக்கள் பனைவளத் துடன் இணைந்துள்ளதனை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போற்றப் பெற்றுள்ளது. உருவிலும் உணர்விலும் பனை தமிழர் வாழ்வில் எவ்வாறு இணைந்திருந்தது என்பதை பண்டை தமிழ் இலக்கியங்கள் மூலம் அறியமுடியும். தமிழர்களின் அகவாழ்விலும் புறவாழ்விலும் அது நெருங்கியுள்ளதை அறியலாம் வறண்ட வாழ்க்கைப் பாதையை வளமாக்கியதுடன் காதலும் வீரமும் காண உதவியுள்ளது. பனையின் தோற்றமும் பண்பாடும் புலவர்களின் மொழி வளத்திலே சிறப்புப் பெற்று சங்க இலக்கியங்களிலே பரவலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பனையின் பொருட்கள்**

உலகில் பனையும் தென்னையும் ஒரே மாதிரியான நாடுகளில் வியாபித்திருக்கின்றன. தமிழ் மக்கள் பனையினைக் கற்பகதருவென போற்றும் போது சிங்கள மக்கள் தென்னையினை கற்பகதருவெனப் போற்றி பாதுகாத்து வளர்த்து வருகின்றனர். இந்த வகையில் பனை, தென்னை ஆகிய இரு தாவரங்களும் பொது வழக்கும் பெயராகத் "தாலம்" எனும் சொற்பதம் பண்டைத் தமிழில் அழைக்கப்பட்டதனை மொழியியல் ஆராச்சி நிபுணர்களாலும், தமிழறிஞர்களாலும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. பனை தான் தோன்றியாக வளர்ந்துள்ளதால் தென்னையை விடக் குறைவாகவே காணப்படுகின்றது. பனைவள உற்பத்திகளும் பயன்பாடுகளும் ஆயிரக்கணக்கில் குறிப்பிடப்பட்டாலும் இன்றைய நவநாகரீக உலகில் பல்வேறு பிரதியீட்டுப் பொருட்கள் பனைவள உற்பத்திகளுக்கு மாற்றீடாக சந்தையினை பிடித்துள்ளபடியாலும் தேயிலை, ரப்பர், தென்னை போன்ற பெருந்தோட்டப் பயிர்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் போன்று முன்னரே பனைக்கும் அரசாங்க உதவிகள் கிடைத்திருக்குமானால் பனைவள உற்பத்திகளும் நவீனத்துவமான ஏற்றுமதிக்கான உற்பத்திப் பொருட்களும் அதிகரித்து பனைவள அபிவிருத்தி இன்று பன்மடங்கு பெருகி இருக்கும்.

எனினும் பனையின் முக்கியத்துவத்தை உணர்த்த நடாத்தப்பட்ட பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் அதன் வளப்பெருமையினை உணர்ந்து மிகவும் காலம்தாழ்த்தி 1971ம் அதன்முன் 46 ஆம் இலக்க இலங்கைத் தென்கு அபிவிருத்திச் சட்டத்திற்குச் செய்யப்பட்ட 24ம் இலக்கத் திருத்தத்தின் நியதிகளின் படி வெளியிடப் பெற்றதான1978 ஆகஸ்ட் 7ம் திகதியிடப்பட்ட வர்த்தமான அறிவித்தல் ஒன்றின் மூலம்

பனை அபிவிருத்திச் சபையானது அமைக்கப்பட்டதாகும். ஸ்தாபக காலத்தில் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின்கீழ் இயங்கிய பனை அபிவிருத்திச்சபை 1979ம் பிரதேச இந்து கலாச்சார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1985 ஆண்டு மீண்டும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. 1999 ஆண்டு ஜனாதிபதி செயலகத்துக்கு மாற்றப்பட்டு 2000ம் ஜனவரி முதல் வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்களின் அமைச்சின் கீழும் 2002 ஜனவரி முதல் இந்துகலாச்சார அமைச்சின் கீழும் செயற்பட்டு வருகின்றது.காலத்துக்குக்காலம் சபையின் செயற்பாடுகளும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் மிகவும் குறைந்தளவு நிதியே அரசினால் ஒதுக்கீடு செய்து வருவதனால் பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாட்டை பூரணப்படுத்த முடியாத நிலையிலிருந்து வருகின்றது.

இந் நாட்டில் 60,650 ஏக்கரில் 11மில்லியன் பனைமரங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. யாழ்மாவட்டத்தில்(கிளிநொச்சி உட்பட) 7மில்லியன் பனைமரங்களும் மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் அடர்த்தியாகவும் திருகோணமலை புத்தளம், வவுனியா, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் குறைந்தளவு பரம்பலைக் கொண்டதாகவும் பனைமரங்கள் காணப்படுகின்றன.

இலங்கையின் பனையின் பரம்பல்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 3,50,0000 |
| கிளிநொச்சி | 3,50,0000 |
| மன்னார் | 3,000000 |
| முல்லைத்தீவு | 500,000 |
| வவுனியா | 8,000 |
| அனுராதபுரம் | 40,000 |
| மட்டுநகர் | 200,000 |
| அம்பாறை | 40,000 |
| திருமலை | 210,000 |
| புத்தளம் | 120,000 |
| அம்பாந்தோட்டை | 2,000 |
| | 11,120,000 |

ஆண்பனை **42%**

பெண்பனை **58%**

## பனை மரம் தறித்தல் வீதம்

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் போர்ச்சூழல் காரணமாகக் கடந்த பத்து வருடங்களில் வடபிராந்தியத்தில் ஏறக்குறைய பத்தொன்பது இலட்சம் பனைகள் கிழக்கு பிராந்தியத்தில் ஆறு இலட்சம் மரங்களும் மொத்தமாக 25 இலட்சம் பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

பனை பல காரணங்களுக்காகத் தறிக்கப்பட்டு வருகின்றது. பிரதானமாக யாழ்மாவட்டத்தில் வீடுகட்டும் தேவைக்காகவே தறிக்கப்படுகின்றது. அண்மைக்கால போர்ச்சூழலில் பாதுகாப்பு

அரண்கள் அமைப்பதற்காகப் பெருந்தொகையில் மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. செம்மண் பிரதேசத்தில் விவசாய நிலங்களை உருவாக்குவதற்காகவும் பனங்காணிகளை அழித்து வீடுகட்டுவதற்கான நிலத்தினைப் பெறுவதற்காகவும் பனைமரத்தினை அழிக்கின்றார்கள். எறிகனை வீச்சுகளினாலும் பனைமரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில் வருடாந்தம் 2 இலட்சம் பனை மரங்கள் சராசரி அழிக்கப்பட்டு வருவதனை ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இதனால் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தின் சூழல் பாதிப்படைந்து மழை வீழ்ச்சி குறைந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. இப்பிரதேசத்தில் 5 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பனைநடுகை மேற்கொள்வதன் மூலம் சூழல் பாதுகாக்கப் படுவதுடன் மழை வீழ்ச்சியும் அதிகரிக்கும். அழிந்து படும் பனைவளத்தின் சமநிலையினைப் பேணுவதுடன் பனையின் எண்ணிக்கை பெருக பனந்தொழிலும் பெருகும்.பனைஅபிவிருத்திச் சபை 5 பிரதான நேக்கங்களைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

1. காணிகளில் பனஞ்செய்கையில் ஈடுபடுவதுடன் செய்கைக்கு உதவுதலும் செய்கையை மேம்படுத்தலும், ஒழுங்குபடுத்தலும், பனந்தோப்புகளுக்குள் அடங்கும் நிலத்தின் உற்பத்தித் திறனை அபிவிருத்தி செய்தலும், அதற்கு உதவுதலும்.

2. பனப்பொருட்களும் உற்பத்திசெய்தலும், உற்பத்தியை ஊக்குவித்தலும், உற்பத்தியை விருத்தி செய்தலும், பனம் உற்பத்திப் பொருட்களைப் பதனிடும் முறையில் புதிய நுட்பங்களைப் புகுத்துதலும், உற்பத்தித் தாபனங்களை நவீனப்படுத்தலும், வினைத்திறனை அதிகரிக்க உதவுதலும்.

3. பனம் பொருட்களைக் கொள்வனவு செய்தலும், விற்றலும், சந்தைப் படுத்தலை முன்னேற்றுதலும், இலங்கைக்கு உள்ளேயும், வெளியேயும் பனம் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஊக்குவித்தலும்.

4. பனைவள ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுதலும் நாற்று மேடைகள் அமைத்தல், பனம் பொருட்களைப் பதனிடுதல், பயன்படுத்தல் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ளுதலும்.

5. தொழில் நுட்பத்தன்மை வாய்ந்த சகல விடயங்களிலும் பனந்தொழிலுக்கு வழிகாட்டி மதியுரை வழங்குதல், பனம் பொருள் உற்பத்தியாளர்கள் விஸ்தரிப்பு வேலையாட்கள், ஆலோசனையாளர்கட்குப் பயிற்சியளித்தலும்.

**<u>பனை அபிவிருத்தி சார்ந்த நிறுவனங்கள்</u>**

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கவும் அதனால் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் பனைவள உற்பத்திப் பொருட்களுக்குப் போட்டிப் பொருட்களை இறக்குமதி செய்யாமலும் தடுத்தும் இறக்குமதிச் செலவைச் குறைக்கவும் வெவ்வேறு நிறுவனங்கள் பனை அபிவிருத்தித்திறனுடன் ஈடுபட்டு வருகின்றன.

1. இலங்கை பனை அபிவிருத்திச்சபை
2. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சங்கங்களின் இணையம்,

பேரிணையம்
3. கூட்டுறவுத்திணைக்களம் (பனை தென்னை வளம்)
4. யாழ்பல்கலைக்கழகம், வவுனியா வளாகம், மன்னார் கல்விச் சுற்றியல்
5. இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப ஆராட்ச்சி நிறுவனம்
6. ஏற்றுமதி உற்பத்தி கிராம கம்பெனிகள்
7. உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனங்கள்
8. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
9. சிறு கைத்தொழில் இலாகா
10. தனியார் துறையினர்

## நிறுவனங்களின் பொதுநோக்கங்கள்

1. பனை அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களைத் தீட்டுதலும் அவற்றைச் செயல்படுத்தலும்
2. பனை சார்ந்த மாதிரி உற்பத்திகளை ஒழுங்குசெய்து அவற்றில் பயிற்சி அளித்தல்
3. பனைத் தொழில் வல்லுனர்களின் சமூகபொருளாதார உயர்வுக்கான திட்டங்களைத் தீட்டுதலும் நடைமுறைப்படுத்தலும்
4. மூலவளப் பயன்பாட்டு நிறுவனங்களின் நிதி வளங்களை ஒழுங்கமைத்து நெறிப்படுத்தல்
5. பனைநடுகை மற்றும் அபிவித்தி சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்ளல்
6. பனம் பொருட்களை ஏற்றுமதித்தரத்தில் உற்பத்தி செய்தல், சந்தைப்படுத்தல், நடவடிக்கையினை விரிவுபடுத்தல் ஆகியவற்றை கவனித்தல்
7. நேரடியாகவோ, மறைமுகமாகவோ பனையைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்ட சகல சமூகத்தினருக்கும் வாழ்வளித்தல்.

## பயிற்சித் திட்டங்கள்

பனைத்தொழில் பயிற்சிகள் யாவும் தொன்றுதொட்டே தகப்பனாரிடமிருந்து மகனும் தாயிடமிருந்து மகளும் நேரிடையாகக் கற்றுத் தொழில்முறைகளை அறிந்து வந்தனர். இவர்கள் புராதன முறையிலான வழிமுறைகளையே தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர். இந்த நிலையினை மாற்றும் வகையில் புதிய தொழில்நுட்ப உத்திகளையும், ஆய்வுகளையும் கண்டறிந்தும், கண்டறிந்த ஆய்வுகளையும் தொழில்முறைகளையும் பனைத்தொழில் வல்லுனர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் பகிரங்கப்படுத்தும் வகையில் பனைவளப் பயிர்ச்சி நிறுவனங்கள் மாவட்ட ரீதியில் அமைக்கப்பட்டுச் செயற்படுத்தல்

1. இத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட சகலருக்கும் முதியோர் கல்வி, தொழிநுட்பக்கல்வி, நிர்வாகப்பயிர்ச்சி முதலியவைகளை மேற்கொள்ளுதல்.
2. பள்ளிப்படிப்பினை இடைநடுவில் விட்டு தொழில்முயற்சியில் ஈடுபடும் பனைத் தொழில் வல்லுனர்களுக்குக் கல்விப்பயிற்சி, நிர்வாகப்பயிற்சி, தொழில்நுட்பத் தகவல்கள் வழங்கும் மையங்கள் அமைத்தல்.

## யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக தாலவள அபிவிருத்தி டிப்ளோமா கற்கை நெறி

தாலவள அபிவிருத்தியில் படித்த இளைஞர்களுக்கு தொழில்நுட்ப கல்வியுடன் தொழில் பயிற்சியும் உள்ளடக்கிய வகையிலான மேலான ஆற்றல் சார்ந்த பயிற்சி நெறியினை நீண்டகால கோரிக்கைகளின் அடிப்படையில் யாழ் பல்கலைகழகத்தின் வவுனியா வளாகத்தில்

“தாலவள அபிவிருத்தி நிலையம்” ஆரம்பிக்கப்பட்டு அதன் முதல் செயற்பாடாக தாலவள அபிவிருத்தியில் டிப்ளோமா கல்விச் சாற்றிதழ் பயிற்சி நெறி எதிர்வரும் மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நடவடிக்கை மூலம் உயர்கல்வி நிறுவனங்களில் தாலவள அபிவிருத்திக்கான பீடம் எதிர்காலத்தில் அமையும் வகையிலான முன்முயற்சி தொடங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக நுளைவுக்கான தகுதி பெற்ற மாணவர்கள் டிப்ளோமா கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டு ஒருவருட காலத்துக்கானதாக பயிற்சி நெறி அமையும்.

## விசேட நோக்கங்கள்

1. குடிசைக்கைத்தொழில் மட்டத்தில் பனம்பொருள் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்
2. பல்களைக்கழகங்களில் பயிர்உற்பத்தி, உணவுஉற்பத்தி தொடர்பான ஆராட்ச்சி.
3. மகான, தேசிய, சர்வதேசிய மட்டத்திலான சந்தைவசதி
4. விஸ்தரிப்பு சேவைகளும், பயிற்சியும்
5. தகவல்கள் ஆவணப்படுத்தும் சேவைகள்
6. சுயநிதி உதவித்திட்டத்தை கண்டறிந்து உதவுதல்.

## பனைவள உற்பத்திகள்

### உண்டிபொருட்கள்

**பழம் + பழச்சாறு**

பழம்,பனாட்டு,ஜாம்,கோடியல் ஜோஸ்,பாம்மெலோ,அல்வா, குளிர்கழி,இனிப்புவகைகள், லோவைன்,மதுசாரம்,வினாகிரி பெக்ரின்,மிருகஉணவு.

**கிழங்கு**

புழுக்கொடியல்,ஒடியல்,மா, பாம்போகா,பிஸ்கட்,சொக்லேட், கேக்,லட்டு,இனிப்புவகைகள், ஒடியல்மா,புழுக்கொடியல்மா, உடன்கூழ்,உடனடிதோசை, வடை,பிட்டு,பேக்கரி உற்பத்திகள்

**பூர்ந்துணர்வு சாற்று உற்பத்தி**

பதநீர்,பனம்பாகு,பனைவெல்லம், பனம்கற்கண்டு,பனம்சீனி,கழிவு பாகு, சொக்ளேட்,இனிப்புவகை

கள்,மதுசார உற்பத்தி, செறிவு குறைந்த மதுசாரம்,வினாகிரி, பிறண்டி,விஸ்கி,மது உற்பத்தி

### உண்ணா பொருட்கள்

**ஓலை**

மிருக உணவு,கைப்பணிஉற்பத்திகள் பாவணைப்பொருட்கள்,வீடுமேய, வேலி அடைக்க,அழகு உற்பத்தி, ஈர்க்கு,கூடைகள்,உறி,சுளகு,

**நார்**

நார் பின்னல்,இருக்கைபின்னல், கூடைகள்,பெட்டிகள்,தட்டுகள், கடகங்கள்.

**தும்பு**

உயர் அழுத்த துடைப்பம், கயிறு,நூல்கள்,கைப்பணிகள்.

**எரிபொருள்**

எரிபொருள்,புகையிலைப் பதப்படுத்தல்,சமையல்,கைப்பணி, மிகையூக்க கரி என்பன.

**ஓலை**

வீடுகட்டுவதற்கு,வேலிக்கு, தளபாடம்,எரிபொருள்,கைப்பணி உற்பத்திக்கு,உபகரணம்.

**திரு.வீ.ஜீ.தங்கவேல் ஜே.பீ**
**ஆலோசகர்**
**தாலவள அபிவீருத்தி நிலையம்**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம்**

"பனை வளக் கண்காட்சி சிறப்பு வாழ்த்துகின்றோம்"

**IRON STORES**

**அயன்ஸ் ரோர்ஸ்**

எங்களிடம் கட்டிட பொருட்கள்

1. ஓடு
2. யானை சீற்
3. பலகை
4. சீமேந்து
5. கம்பி வகை
6. உழவு இயந்திர உதிரிப்பகங்கள்
7. மின்சார உபகரணங்கள் மலிவாக கிடைக்கும்

T.P:-023.2309

பெரியகடை,
மன்னார்

"பனை வளக் கண்காட்சி சிறப்பு வாழ்த்துகின்றோம்"

**NANTHINI MUSIC CENTER**

Recording,Photo Copy,Prin,
Laminating,Dealers in
Audio,Video,Film Roll,
Radio Parst & Electrical Goods
Etc

Grand Bazaar,
Mannar.

T.P :023-2076

*With Best Complements*

**SUGANYA TRADERS**
**&**
**GOWRI COMMUNICATION**

Net Phone Calls,IDD Call,
Local Calls,Connecting Calls,
Fax,Photocopy,Lamintiog,
Internet And E.Mail

Ads:-No:55, New Bus Stand,
Mannar.
E-Mail:- gowrmn @sltnet.lk
chanrd@ sltnet.lk

Tel: 023-32121
023-32044
023-32430
Fax: 0094-23-32121

*With Best Complements*

**A.MT. TRANSPORT SERVICE**

102/4,Wolfendhal Street,Colombo -13

Tele:451716,470465,074-612551,
433391, 334976,334985
Fax: 342138

“பனை வளக் கண்காட்சி சிறப்பு வாழ்த்துகின்றோம்”

**T.Arumugasamy**

**Organiser & Consultant**

# SriLanka Insurance Corporation Limited

**Res:**
"Lorenz Court"
82A,Lorenz Road,
Colombo -04
Tel:-506702,503972
Cell:0722-72735

**Office:**
UG 85, People's Park Compiex,
Colombo - 11
Tel :- 431490,472020
074-712472
Fax :- 431490

"பனை வளக் கண்காட்சி சிறப்பு வாழ்த்துகின்றோம்"

# FRANCIS ENTERPRISES

GENERAL MERCHANTS

**Distributors of Fishing & Spare Parts Etc.**

**Dealers for YAMAHA, YANMAR**

2nd Floor,
Gentral Super Market Complex
Colombo 11

T.P:-01-434475
Fax:-01-344580

"பனை வளக் கண்காட்சியும் போட்டியும்
சிறப்புற நடைபெற எமது வாழ்த்துக்கள்"

தலைவர்/பொதுமுகாமையாளர்

# சங்கனை
# பனை தென்னை
# கூட்டுறவுச் சங்கம்

"பனை வளக் கண்காட்சியும் போட்டியும்
சிறப்புற நடைபெற எமது வாழ்த்துக்கள்"

தலைவர்/பொதுமுகாமையாளர்

# பண்டத்தரிப்பு
# பனை தென்னை
# கூட்டுறவுச் சங்கம்

"பனை வளக் கண்காட்சியும் போட்டியும்
சிறப்புற நடைபெற எமது வாழ்த்துக்கள்"

தலைவர்/பொதுமுகாமையாளர்

மானிப்பாய்
பனை தென்னை
கூட்டுறவுச் சங்கம்

VIJAYATHARSHIKA
COMMUNICATION

Local Calls, IDD Call, Internet Calls,
Fax Service,E-Mail & Photocopy

Kindly customer Service in

MOOR STREET,
MANNAR.

T.P:023-32716,023-32006
& 023-32421
Fax : 023-32006

VIJAYATHARSHIKA
PRINTERS

MOOR STREET,
MANNAR.
T.P:023-32006

Lest cost,Quick print & Quality

Letter head,Bill Books,Reports,Weddihg cards,
Invitations,School Megazine,Binding,
Paper Cutting & Computer type setting

Any Kinds of printing are a vailable

## மதுபானப் பிரியர்களே!

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க
அருந்திடுவீர் எமது உற்பத்திகளை

'விகர்' 'பனை விசேடம்' 'விஎஸ்வி 99'

'இரட்டைவடி பனஞ்சாராயம்'

'பழைய பனஞ்சாராயம்'



எமது சேவைகள்

1. அங்கத்தவர் பணியாளர் பயிற்சி நெறிகள்
2. முன்பள்ளி மாணவருக்கான சத்துணவு வழங்கல்
3. முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறிகள்
4. அங்கத்தவர் ஓய்வு, மரணக் கொடுப்பனவுத் திட்டம்
5. தொலைபேசி, போட்டோஸ்ராட் சேவை
6. சமூக கலாச்சார நிகழ்வுகள்

மானிப்பாய்
T.P:-021-3465

வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
பதிவு இலக்கம்:-யா/மா-2154-06/11/1993

Printed by Vivekananda Printers Stanly Road,Jaffna




## *ORIGINAL PALMYRAH ARRACK*

*from*

# THICKAM DISTILLERY

Thickam, Alvai, Sri Lanka